
# புதிய ஆராய்ச்சி

காலாண்டு ஆய்வு இதழ்

இதழ் : 2
ஜுலை 2009



சிவசுப்பிரமணியம் ரகுராம்

கோ.ரகுபதி

ஸ்டாலின் ராஜாங்கம்

செந்தீ நடராசன்

ஆறு. இராமநாதன்

கே. இராஜகுமார்

இ. முத்தையா

# புதிய ஆராய்ச்சி

இதழ் : 2

ஜூலை 2009



ஆசிரியர்
ஆ. சிவசுப்பிரமணியன்

நிர்வாக ஆசிரியர்
சி. சொக்கலிங்கம்

ஆசிரியர் குழு
ந. முத்துமோகன்
இ. முத்தையா
நா. இராமச்சந்திரன்
பா. ஆனந்தகுமார்
ஞா. ஸ்டீபன்
இரா. காமராசு
மு.பு. டெரன்ஸ் சாமுவேல்

ஆலோசனைக் குழு
எஸ். தோதாத்ரி
மே.து. ராசுகுமார்
ஆறு. இராமநாதன்
ஆ. தனஞ்செயன்
டி. தருமராஜன்
ஆ. செல்லபெருமாள்
பெ. மாதையன்
சி.மா. இரவிச்சந்திரன்
சீ. பக்தவத்சல பாரதி
ச. பிலவேந்திரன்



முகவரி
நிர்வாக ஆசிரியர்
புதிய ஆராய்ச்சி,
252,செட்டித்தெரு,
கோட்டாறு, நாகர்கோவில்.

அட்டை வடிவமைப்பு
'புத்தா' டி.டி.பி
திருநெல்வேலி

வடிவமைப்பு
ரிஷி டி.டி.பி

அச்சகம்
முத்துலெட்சுமி,அச்சகம், பாளை.

தனி இதழ் : ரூ. 40/-
ஆண்டுச் சந்தா : ரூ. 150/-


'புதிய ஆராய்ச்சி' யின் இரண்டாவது இதழ் வெளிவருகிறது. முதல் இதழ் தமிழறிஞர்களிடமும், ஆய்வாளர்களிடமும் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இதழின் வடிவமைப்பும், கட்டுரைகளும் தரமிக்க ஆய்விதழ் தமிழில் இல்லாத குறையை புதிய ஆராய்ச்சி நிவர்த்தி செய்கிறது என்ற நம்பிக்கை ஆய்வாளர் களிடத்தில் உறுதிபட்டுள்ளது. எனவே ஆசிரியர் குழுவின் பொறுப்பு இன்னும் அதிகமாகிறது என்பதை உணர்கி றோம். இதழைக் குறித்து வாய்மொழிப் பாராட்டுதல்களே பெரிதும் வந்துள்ளன. அச்சாக்கத்தில் ஏற்பட்டுள்ள ஒரு சில குறைகள் வாசகர்களால் சுட்டிக்காட்டப்பட்டன. அவற்றை இனி வரும் இதழ்களில் களைய முயற்சிக்கிறோம். உள்ளடக்கம் குறித்த விமர்சனங்கள் எழுத்து வடிவில் வராதது பெரும் குறை. இனி வரும் காலங்களில் ஆய்வாளர்கள் உடனுக்குடன் எழுத்து வடிவில் எதிர் வினையாற்றுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். இந்த இதழில் ஏழு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் அததற்குரிய தனித் தன்மையுடன் விளங்குகின்றது. தமிழியல் ஆய்வில் உற்றுக் கவனிக்கப்பட வேண்டியவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாக அவை விளங்குகின்றன. அதே நேரத்தில் ஆய்வு நெறியியலுக்கும் அவை துணைபுரிகின்றன.

'புதிய ஆராய்ச்சி' குறித்து எழுதுங்கள். அறிஞர்களும் ஆய்வாளர்களும் ஆய்வுக்கட்டுரைகளைப் புதிய ஆராய்ச்சிக்காக எழுதுங்கள். புதிய ஆராய்ச்சி இதழ் தொடர்ந்து வெளிவருவதற்கு உங்கள் ஆதரவையும், அபிப்பிராயத்தையும் எதிர்பார்க்கிறோம்.

* * *

திராவிட மொழியியல் அறிஞர் பேராசிரியர் வ.அய்.சுப்பிரமணியம் மறைந்து விட்டார் அவருக்கும் பேராசிரியர் நா.வானமாமலை நிறுவிய ஆராய்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. திராவிட மொழியியலுக்கு அவருடைய பங்களிப்பு மகத்தானது. நல்ல ஆய்வாளர் களைத் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்தியவர் அவர். பல்வேறு ஆய்வு நிறுவனங்களைத் தோற்றுவித்தவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதல் துணைவேந்தராய் இருந்து அப்பல்கலைக்கழகத்தை உயர்தரத்திற்குக் கொண்டு வந்தவர். குப்பத்தில் அமைந்துள்ள திராவிட



பல்கலைக்கழகத்தின் முதல் இணைவேந்தராக இருந்து அப்பல்கலைக்கழகத்தைச் செழிப்புற வளர்த்தவர். பன்னாட்டுத் திராவிட மொழிகள் பள்ளியைத் தோற்றுவித்து அதன் மதிப்புறு இயக்குநராக இருந்தவர். ம.தி.தா. இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். கேரளப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி, பின் அப்பல்கலைக் கழகத்தில் முதல் மொழியியல் துறைத் தலைவராகப் பொறுப்பேற்று பொறுப்புடன் செயல்பட்டார். திருவனந்தபுரத்தில் 'இந்திய திராவிட மொழியியல் கழகம்' (Dravidian Linguistics Association of India) என்ற நிறுவனத்தை உருவாக்கினார். International Journal of Dravidian Linguistics என்ற ஆய்விதழைத் தொடங்கி தொடர்ந்து வெளிக் கொணர்ந்தார்.

தகுதி வாய்ந்த ஆய்வாளர்களையும் அறிஞர் களையும் விருப்பு வெறுப்பின்றி கண்டுணர்ந்து அவர்களுக்கே உரிய பணியினை வழங்கி தரம் மிக்க ஆய்வுகளை பேராசிரியர் வ.அய்.சு. வெளிக் கொணர்ந்தார். அவ்வறிஞர்களில் குறிப்பிடத்தகுந்தவர் பேராசிரியர் நா.வானமாமலை. பேராசிரியர் நா.வா. விடம் தமிழ் நாட்டார் படைப்புகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டினார். அதற்காக பேராசிரியரை தார்வார் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி அங்கேயே தங்க வைத்து ஆய்வுப் பணியினை மேற்கொள்ளச் செய்தார். "Interpretations of Tamil Folk Creations" என்ற மிகச் சிறந்த ஆய்வேட்டினைப் பேராசிரியர் நா.வா. உருவாக்கினார். அவ்வாய்வேட்டை நூலாக DLA வெளியிட்டது. அந்நூலை தமிழில் மொழிபெயர்த்து நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் (NCBH) விரைவில் வெளியிட இருக்கிறது. அதுபோல பல அறிஞர்களின் தரமிக்க ஆய்வுகளைப் பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம் வெளிக்கொண்டு வந்துள்ளார். பேராசிரியர் மறைவு தமிழியல் ஆய்வுக்குப் பேரிழப்பு ஆகும். புதிய ஆய்வாளர்கள் அவரைப் பின்பற்றி தமிழியல் ஆய்வுக்குத் தொண்டாற்ற வேண்டும்.

ஆசிரியர் குழு

*சந்தாத் தொகையினை செந்தீ நடராசன், 36/122, கல்படித் தெரு, நாகராஜா கோவில் அருகில், நாகர்கோவில் - 629 001. என்ற முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம். தொலைபேசி : 94421 38856*

## பொருளடக்கம்


1. ஈழத்தில் கண்ணகி வழிபாடு — 5
*சிவசுப்ரமணியம் ரகுராம்*

2. மேலுடுப்பு அணிதல் :
சாதிய ஒழுங்கிற்குக் கீழ்ப்படியாத தலித் பண்பாட்டு இயக்கம் — 18
*கோ. ரகுபதி*

3. நந்தன் என்னும் மன்னன் — 32
*ஸ்டாலின் ராஜாங்கம்*

4. வடசேரி சாலியர் வழக்குக் கல்வெட்டு — 39
*செந்தீ நடராசன்*

5. ஆய்வு நெறியாளர் — 43
*முனைவர் ஆறு. இராமநாதன்*

6. மரபார்ந்த கலைகள் :
பாதுகாப்பு வழிமுறைகளில் சட்டச் சிக்கல்களும் தீர்வுகளும் — 49
*கே. இராஜ்குமார்*

7. சிரிப்பின் பண்பாட்டுப் பொருண்மை — 53
*இ. முத்தையா*

## கட்டுரையாளர்கள் முகவரி


1. **சிவசுப்ரமணியம் ரகுராம்**
   விரிவுரையாளர்,
   கிழக்குப் பல்கலைக்கழகம்,
   திருகோணமலை வளாகம்,
   இலங்கை.

2. **கோ. ரகுபதி**
   இணை ஆய்வாளர்,
   சமூக விளக்கு மற்றும் உட்கொணர்வு ஆய்வு மையம் (CSSEP),
   மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
   திருநெல்வேலி.

3. **ஸ்டாலின் ராஜாங்கம்**
   ஆய்வாளர்,
   தமிழ்த்துறை,
   காந்திக் கிராம  கிராமியப் பல்கலைக்கழகம்,
   திண்டுக்கல்.

4. **செந்தீ நடராசன்**
   ஆய்வாளர்,
   தமிழ்த்துறை,
   காந்திக் கிராம  கிராமியப் பல்கலைக்கழகம்,
   திண்டுக்கல்.

5. **முனைவர் ஆறு. இராமநாதன்**
   பேராசிரியர், நாட்டுப்புறவியல் துறைத் தலைவர்,
   மொழிப்புலம் தமிழ்ப் பல்கலைக்கழகம்,
   தஞ்சாவூர் - 613 010.

6. **கே. இராஜ்குமார்**
   மேலாளர் (சட்டம்),
   அலகாபாத் வங்கி,
   சென்னை மண்டலம்.

7. **இ. முத்தையா**
   தலைவர், நாட்டுப்புறவியல் துறை,
   மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
   மதுரை.

# 1

# ஈழத்தில் கண்ணகி வழிபாடு

*சிவசுப்ரமணியம் ரகுராம் ✱*

சிலப்பதிகாரம் என்பது குடிமக்கள் காப்பியமாகப் போற்றப்படுமிடத்து, அந்தக் காப்பியம் வழியே வரும் செய்திகள், அக்காலத் தமிழர்தம் வாழ்வியலைச் சித்திரிக்கும் முறைமைகளும் - அச்சித்திரிப்புகளுக்கூடாகத், தெரியவரும் தமிழர் பாரம்பரிய சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டு நிலைக்களன்களும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைகின்றன. இவை - இக்காப்பியம் வழியே தனித்தும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தும் தமிழர் வாழ்வியலை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இந்தவகையில் - சிலப்பதிகாரம் காட்டும் கண்ணகியின் குணாதிசயங்களும், அவள் எதிர்கொண்ட சிக்கல்களும் - குறிப்பாக, கண்ணகியின் போராட்ட வாழ்வும் - அவளைத் தெய்வ நிலைக்கு உயர்த்திச் செல்கின்றன. அவள் வாழ்வு - மக்களின் தெய்வமாக அவளை உள்வாங்கச் செய்கிறது. இலக்கிய கர்த்தாக்களும், வரலாற்றாசிரியர்களும் சுட்டும் 'கற்புக்கரசி' நிலை கடந்து, அது தொடர்பான மாயாவாதத் தன்மைகள் கடந்து - கண்ணகியின் வாழ்வு, அடித்தட்டு மக்களுக்கே உரிய ஓர்மையையும், நியாயத்தின் பாலான துணிச்சலையும் முன்வைப்பதை எவரும் மறுத்துவிட முடியாது. கண்ணகியின் வாழ்வு காட்டும் போராட்டக் குணங்கள் மக்களை அவர்தம் தெய்வமாகக் கண்ணகியை ஏற்றிப் போற்றவும், வழிகாட்டுதல்களைப் பெறவும் - இன்னமும் அதிகமாக நெருங்கிச் செல்லவும் வைத்ததையே, இன்றும் நிலவும் கண்ணகி வழிபாடு எடுத்துக்காட்டுகிறது. தாய்த்தெய்வ வழிபாட்டில் கொண்டிருந்த நம்பிக்கையும், இயற்கையோடு பின்னிப் பிணைந்த வாழ்வும் கண்ணகியைத் தமக்குரிய தெய்வமாக ஏற்றுக்கொள்ள மக்களுக்குச் சாதகமாகவே அமைந்தன.

இவ்வாறான ஒரு வழிபாட்டு மரபு, தமிழகத்தில் மட்டுமல்லாது ஈழத்திலும் இற்றைவரை செழுமையான தளத்தினூடாக நகர்வதை அவதானிக்க முடியும். ஏராளம், ஏராளம் எதிர்வினைகள் வந்தபோதும் ஈழத்தில் கண்ணகி வழிபாடென்பது இற்றைக்கும் அருகிப்போகாமல் இருப்பதை இக்கட்டுரை ஆராய முயற்சிக்கிறது. கண்ணகி வழிபாடு ஈழத்தில் தோற்றம் பெற்றமை பற்றியும், மக்கள் நம்பிக்கைகள், காலப்போக்கிலான மாற்றங்கள், திரிபுபடுத்தல்கள், அவற்றுக்குப் பின்னாலான அரசியல் எனப் பன்முக நோக்கில் இக்கட்டுரை விரிவடைகிறது.

## ஈழத்தில் கண்ணகி வழிபாடு - பிரதேச வாரியான நோக்கு.........

ஈழம் எனப் பொதுவில் உரைத்தாலும் - பிரதேச ரீதியாகச் செல்வாக்குப் பெற்று விளங்கும் சமூக, பொருளாதார பண்பாட்டுப் புவியியல் சூழல்களுக்கேற்ப - குறிப்பாக - மத, மொழி ரீதியான வேறுபாடுகளைக் கருத்திலெடுத்தும் - 'ஈழத்தில் கண்ணகி வழிபாடு' என்பதை நான்கு பிரிவுகளூடாக அணுக முடியும்.

வடக்கே -I) யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், II) வன்னிப் பெருநிலப் பரப்பிலும், III) கிழக்கே - மட்டக்களப்பு அம்பாறை, திருகோண மலையிலும், IV) மிகுதியாக சிங்களப் பகுதிகளிலும் நிலவிய / நிலவிவரும் கண்ணகி வழிபாட்டு மரபுகளை இவ்விதம் தனித்தனியே ஆராயலாம்.

இவ்வாறாக வேறு வேறு நிலைகளூடாக ஆராயப் புகுந்தாலும் - இவற்றினிடையே பொதுமைத் தன்மைகள், தொடர்ச்சித் தன்மைகள் பல இருப்பதையும் இங்குச் சுட்டிக்காட்டுதல் அவசியமானதும் பொருத்தமானதும் ஆகும்.

### I. யாழ். குடாநாட்டில் கண்ணகி வழிபாடு

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் கயவாகு மன்னன், இலங்கைக்கு வந்திறங்கிய இடம் - யாழ்ப்பாணத்தின் பண்டைய காலத் துறைமுகமொன்றினைக் குறிக்கும் 'சம்பு கோளா' அல்லது 'சம்புகோளப் பட்டினம்' எனக் கூறப்படுகிறது. கயவாகுமன்னன் தான் இறங்கிய இடத்திற்கு அருகிலிருந்து 'அங்கணாமைக்கடவை' என்னும் இடத்தில்

✱ விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம் திருகோணமலை வளாகம், இலங்கை.

ஒரு கண்ணகி கோயிலைக் கட்டினானென்றும், கண்ணகி வழிபாடு பற்றி ஈழத்திலே எழுந்த பழமையான கோயில் இதுவேயாகும் என்றும் ஈழத்தின் மூத்த பேராசிரியர்களில் ஒருவரான கலாநிதி க. கணபதிப்பிள்ளை கூறுகிறார்.[1]

இந்த அங்கணாமைக்கடவை பழமையும் பெருமையும் உள்ள ஒரு கண்ணகித் தலமாகும் என்பதைக் கிழக்கே மட்டக் களப்பில் வழங்கும் 'உடுக்குச்சிந்து' பாடற் குறிப்புக்களும் தெரிவிக்கின்றன.[2] கண்ணகி யம்மன் வழிபாடு வந்துற்றதை, கண்ணகி யம்மனே வந்துற்றதாக 'அம்மன் சிந்து' இப்படிச் சொல்கிறது:

***அங்கொணாமைக் கடவை செட்டிப்புலம் அச்செளு ஆனதோர் வற்றாப்பளை மீதுறைந்தாய் பொங்குபுகழ் கொம்படி பொறிகடவை சங்குவயல் புகழ்பெருகு கோலங்கிராய் மீ துறைந்தாய்***

இங்கு அங்கொணாமைக்கடவை முதல் - செட்டிப்புலம் அச்செளு, கொம்படி, சங்கு வயல் போன்ற இடங்களோடு-வன்னிப் பெரு நிலப்பரப்பின் வற்றாப்பளையிலும் கண்ணகி யம்மன் உறைவிடங் கொண்டதாக இப்பாடல் குறிப்பிடுகிறது.

இதேவேளை-மதுரையைத் தீக்கிரையாக்கிவிட்டு ஐந்து தலை நாகமாக மாறிய கண்ணகி தெற்கு நோக்கி வந்து முதலில் யாழ் குடாநாட்டிற்கு அருகேயுள்ள நயினா தீவில் தங்கி (இங்கு நாகபூஷணி அம்மன் ஆலயம்-வரலாற்றுப்பெருமையுடன் இன்றுமுள்ளது) பின் - கருவில், வட்டுக்கோட்டை,நவாலி,களுவோடை, சுதுமலை,சீரணி,அங்கணாமைக்கடவை, அளவெட்டி ஆகிய யாழ்ப்பாணக் கிராமங்களிலும் தங்கி, பின்னர் - வன்னிப் பெருநிலப்பரப்பிற்குக் கடற்கரையோராமா வற்றாப்பளை நோக்கிச் சென்றாள் என்ற கர்ணபரம்பரைக் கதையொன்றும் ஈழத்தில் உள்ளது[3].

இது இவ்வாறிருக்க, இன்னுமொரு ஐதீகக்கதையில், பாண்டியமன்னன் கோவலனைப் பல துண்டங்களாக வெட்ட, கண்ணகிஅவற்றைச்சேர்த்தெடுத்து உயிரளித்த போது கோவலன் எழுந்திருந்தான் என்றும் அவன்,

***'மாதகியோ கண்ணகி யோவந்தவர்கள் படுகளத்தில் மாதகியாள் வந்தாளே வாடியென் மடிமேல்'***

எனக் கூறினான் என்றும், மாதவியின் பெயரை முதலில் கோவலன் குறிப்பிட்டமையால் வேதனையும் கோபமும் அடைந்த கண்ணகி ஐந்துதலை நாகமாக உருமாறி தமிழக த்திலிருந்து தெற்கு நோக்கி வந்ததாகவும் கூறப்படுகிறது[4].

அவள் யாழ்பாணத்தில் முதற்கோயில் கொண்ட அங்கணாமைக்கடவை அல்லது அங்கணாக்கடவை ஆலயம் பிற்காலத்தில் அழிவுற்றதாகவும், இக்கோயிலின் அமைவிடத்தைக் கயவாகு வந்திறங்கிய மாதகலிலிருந்து உள்நோக்கிப் பல மைல் தொலைவில் அமைந்திருக்கும் கந்தரோடை என்னும் புராதன, தமிழ் பௌத்தம் கோலோச்சிய நகருக்குச் சமீபமாக கதிரமலைக் கருகாமையில் வரலாற்றாசிரியர்கள் கண்டு கொண்டதாக இன்னொரு தகவலும் தெரிவிக்கப்படுகிறது[5].

இக்கோயிலைத்தவிர,யாழ்ப் பாணத்தில பல பாகங்களிலும் கண்ணகிக்குக் கோயில்கள் இருந்துள்ளன. புங்குடுதீவு, மண்டைதீவு, ஏழாலை, காங்கேசன்துறை, வீரமாணிக்கதேவன்துறை - மயிலிட்டி, நாகர்கோயில், புத்தூர், கோப்பாய் நீர்வேலி, கைதடி, கச்சாய், விடத்தற்பளை, சுட்டிபுரம் எனப் பல பகுதிகளிலும் கண்ணகி கோயில்கள் காணப்பட்டுள்ளன.

கண்ணகி வழிபாடு - யாழ்ப்பணத்தின் பல இடங்களிலும் மக்களின் வரவேற்பைப் பெற்றதற்கு ஏற்கனவே யாழ்ப்பாணத்திலும், ஈழத்தின் பிற தமிழர் தாயகப்பகுதிகளிலும் நிலவி வந்த தாய்த்தெய்வ வழிபாடு அனு சரணையாக, அடிப்படையாக அமைந்தி ருக்கமுடியும் என்பது ஒரு வாதமாகும்.

மேலும் சங்க நூல்களில் குறிப்பி டப்பட்ட வீரவழிப்பாட்டின் தொடர்ச்சியாக[6], கண்ணகி வழிபாடு நோக்கப்படுவதும், நடுகல் வணக்கம் ஈழத்திலும் சிறப்பிடம் பெற்றி ருந்ததும் கவனிக்க வேண்டியதாகும்.

கண்ணகி வழிபாட்டைச் சேரன் செங் குட்டுவனே முதலில் ஆரம்பித்தான் என்ற செய்தி தவறானது என வரலாற்றாய்வாளர்கள் பலர் சுட்டிக்காட்டுவதும், கண்ணகி வழிபாடு என்பது பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய நடுகல் வழிபாட்டைச் சார்ந்தது என பேராசிரியர் க. சிற்றம்பலம் உறுதியாகக் கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது.

வாய்மொழி மரபாகத் தமிழ்நாட்டில் பேணப்பட்ட கண்ணகி பற்றிய கதையும் வழிபாடும், இலங்கையை, சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்பே வந்தடைந்திருக்கும் என்பதும், பௌத்தம் இலங்கைக்கு வந்த பின்னர் பல தளங்களிலும் இடம்பெற்ற 'பௌத்தமயவாக்கம்' (Buddhicisation) கண்ணகி வழிபாட்டையும் தாய்த்தெய்வ வழிபாட்டையும் தனக்கேற்றாவாறு உள்வாங்கிக் கொண்டதாகக் கூறப்படுவதும் இந்த அடிப்படையிலானதே.

**யாழில் கண்ணகி அம்மன் வழிபாட்டுச் சடங்குகள் ...**

யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணகியம்மன் கோயில்களில் வைகாசிப் பொங்கல் சிறப்பானதாகும், பொங்கலுக்குச் சில நாட்களுக்கு முன்னரே கோயிலைத் திறந்து கண்ணகி வரலாற்றினைக் கூறும் கதைகளை மக்கள் படிப்பர். மடையும், குளிர்த்தியும் நேர்திக்கடன் செலுத்தலுமாக தொடரும். கிராமிய வழிபாட்டு மரபுகளின் அடிப் படையில், வழிபடுவோரின் இயல் தகைமைக்கு ஏற்றவகையில் அமைந்திருந்த இந்த ஆலயங்களில் பூசகர்கள், பார்ப்பனரல்லா தோராகவே இருந்துள்ளனர். அவற்றில் ஆகமமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்க வில்லை.

கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்புகூறல் போன்ற நூல்கள் கண்ணகி கதையையொட்டி ஈழத்திலே எடுத்த முக்கிய நூல்களாகக் கருதப்படுகின்றன[7]. இவை பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர். கா. சிவத்தம்பி - கண்ணகிவழக்குரையை'மக்கள் நிலைப் பட்டதான இலக்கியம்' என்றும் கோயில் ஏடுகள் வழியாகவே அது பேணப்பட்டதையும் குறிப்பிடுகிறார்[8].

மேலும் கோவலன் - கண்ணகி நாடகம் என்ற பெயரில், தெய்வ வலிமை மறக்கப்படாத, குறிப்பிட்ட சமூகத்தினரால் ஆடுவனவாக அமைந்த கூத்துக்களும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன[9].

இந்தளவில்யாழ்ப்பாணத்தில் கண்ணகி வழிபாடென்பது, ஒரு நாடுப்புற தெய்வ வழிபாடாக மக்கள் மத்தியில் வேரூன்றியிருந்தமையை அறியலாம்.

ஆனால் ஆறுமுக நாவலர் முன்வைத்த நாட்டார் தெய்வ வழிபாட்டு எதிர்ப்பு தீவிரப் பிரச்சாரங்களும் - அதுவழியே யாழ்ப்பாணச் சமூகத்தின்பண்பாட்டுத்தளத்தில் உருவாக்கப் பட்ட 'சமஸ்கிருத நெறிப்படுத்துகை'யும் (Sanskritization) கண்ணகி வழிபாட்டையும் பாதிக்கவே செய்தன.

வழிப்பாட்டிடங்களில் வழிபடப்படும் தெய்வங்கள் மாற்றப்படுகையும், வழிபாட்டு முறைமைகள் மாற்றப்படுகையும், கோயில் களின் அந்தஸ்து மாற்றப்படுகையுமாக - மூன்று முறைகளில் இந்த மாற்றங்கள் நிகழ்ந்ததாக பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவார்[10]. இந்த மாற்றங்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அளவுக்குவன்னிப் பெருநிலப்பரப்பிலோ, கிழக்கிலோ இடம்பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது[11].

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்த மாற்றங்களின்படி கண்ணகியம்மன் ராஜராஜேஸ்வரி அம்மனாக மனோன்மணி அம்மனாக பல இடங்களில் மாற்றப்பட்டாள். யாழ்ப்பாண சமூகத்தில் முக்கிய இடம்பெறும் பஞ்சாங்கங்களில் கூட புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் என வழங்கும் இராஜராஜேஸ்வரி அம்மன், புத்தூர் கிழக்கு கண்ணகை அம்மன் என வழங்கும் இராஜராஜேஸ்வரி அம்மன் என இவ்விதம் மாற்றங்கள் ஏற்பட்டன[12].

ஆனாலும் முற்றுமுழுதாக, கண்ணகியம்மன் வழிபாடு யாழ்ப்பாணத்திலிருந்து அற்றுவிட்டதாகக் கூறுவதற்கும் இல்லை. இன்றும் அங்கொன்றும், இங்கொன்றுமாக கண்ணகியம்மன் ஆலயங்கள் குடாநாட்டில் இருப்பதே இதற்குச் சான்று பகரும்.

**II.வன்னிப் பெருநிலப்பரப்பில்**

வன்னிப் பெருநிலப்பரப்பு - அற்றைக்கும் இன்றைக்கும் அடங்காத் தமிழரின் வீரவிளைநிலமாய் இருந்து வருகிறது. அடர்ந்த காடுகளும் வயல்வெளி களும் பசுமையான கிராமங்களாக நீண்டு பரந்து தொடரும் வன்னி நிலத்தின் ஆதியான வழிபாட்டம்சங்கள் தாய்த்தெய்வ வழிபாடும் நாகவழிபாடும் என்பது வரலாற்றாசிரி யர்களின் உறுதியான கருத்து. அதற்கான ஏராளம் ஏராளம் ஆதாரங்களையும் வன்னி நிலம் தந்தேயிருக்கிறது.

அடங்காப்பற்று என்றழைக்கப்பட்ட வன்னிப் பெருநிலம், எப்பொழுதும் பகைவற்கு அடங்கிக்கிடந்ததில்லையாழ்ப்பாணத் தரசுகள் வீழ்ந்துபடும் போதெல்லாம் ஆட்சி மையம் இயல்பாகவே பெருநிலத்துக்கு நகர்ந்து விடும் அல்லது பகை சூழ்ந்த போதெல்லாம் தமிழரசின் உயிர்ச்சூட்டைப் பெருநிலமே ஒளித்து வைத்திருக்கும் என்கிறார் நிலாந்தன்[13].

இவ்வாறான வன்னிப் பெருநிலப் பரப்பில் துணிவும் ஆவேசமும் கொண்ட கண்ணகியை வழிபடுதலும் சிறப்புற்றிருந்தமை வியப்பிற்குரிய ஒன்றல்லவே.

**கண்ணகி வருகை பற்றிய கதைகளும் சடங்குகளும்**

கண்ணகி வழிபாட்டுடன் இணைந்த பல கதையாடல்கள் வன்னிப் பிரதேசத் திற்கென்றே காணப்படுகின்றன.

மதுரையைத் தீக்கிரையாக்கிய பின்னர் சீற்றம் தணியாத கண்ணகி, தனது கோபத்தைத் தணிப்பதற்காகத் தென்திசை நோக்கி வந்தாள் என்பதும் அவ்வாறு வந்த அவள் வன்னிக் கரையோரப் பகுதிகள் வழியாக முருகன் கோயில் கொண்ட கதிர்காமம் சென்றாள் என்பதும் வன்னிப் பிரதேச மக்களின் நம்பிக்கையாக இருந்துள்ளது[14].

புதுக்குடியிருப்பு, பொக்கணை, அம்பலவன் பொக்கணை, வட்டுவாகல், வெள்ளாம் முள்ளிவாய்க்கால், வற்றாப்பளை, கொக்கிளாய் என வன்னியின் கிழக்குக் கரையோரமாக நீளும் இடங்களிலெல்லாம் அம்மன் கோவில்களும் வழிபாட்டு முறைகளும் இருப்பதும் இந்த ஐதீகத்துக்குத் துணையாகிறது[15].

இன்றும் கதிர்காமம் நோக்கி வட பகுதியிலிருந்து புறப்படும் பாதயாத்திரைக் குழுவினர் மேற்குறித்த வழியே செல்வதும் அவர்கள் வன்னிக்குள் நுழைந்த பின்னர் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலில் நடைபெறும் வைகாசி மாத பொங்கல் விழாவில் கலந்துகொண்டு, பின்னர் கிழக்கே திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை வழியே செல்லும்போது ஆங்காங்கே காணப்படும் கண்ணகி அம்மன் கோவில்களுக்குச், சென்று வழிபடுவதும் மரபு என்பது குறிப்பிடத்தக்கது.

கண்ணகி வழிபாட்டைச் சேரநாட்டுக் குடிகள் இலங்கையில் குடியேற்றப்பட்டபோது இலங்கைக்கு அறிமுகப்படுத்தியிருக்கலாம் என்பதும் ஆய்வாளர் சிலரது கருத்தாகும். குறிப்பாக மட்டக்களப்பில் குடியேறிய சேர நாட்டவர் தொடர்பில் பேராசிரியர் இ.பாலசுந்தரம் முன்வைக்கும் கருத்துக்களும்[16] மட்டக்களப்பிலே காரைத்தீவு கண்ணகி அம்மன் கோயிலுக்கும், முல்லைத்தீவு வற்றாப்பளையிலே உள்ள கண்ணகியம்மன் கோயிலுக்குமான நெருங்கிய தொடர்பிருப்ப தாக மட்டக்களப்பிலே வழங்கும் கதைகளும்[17] இங்கு கவனிக்கத்தக்கன.

எது எவ்வாறிருந்தாலும் வற்றாப்பளை கண்ணகியம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய மக்கள் இலக்கியங்களான சிலம்புகூறல், அம்மன் சிந்து, மழைக்காவியம், வற்றாப்பளை கண்ணகியம்மன் வசந்தன், தோத்திரக் காவியம், தோத்திரப் பதிகம், வரலாற்றுச் சிந்து, அம்மானை, கும்மி, பனிச்சையாடிய பாடற்சிந்து, கோவலன் கூத்து முதலியன வன்னியின் வரலாற்றைக் கூறும் ஆதாரங்களாகவும் இருப்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதே[18].

வன்னியிலுள்ள கண்ணகியம்மன் வழிபாட்டிடங்களில் முக்கியமான வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பற்றிய ஐதீகக் கதைகளும் பல உள்ளன.

மதுரையை எரித்த பின்னர் - கண்ணகி கதிர்காமம் செல்லும் பாதையில் பத்தாவது தரிப்பிடமாக, வைகாசி விசாகத் தினமன்று வற்றாப்பளையில் இடைச்சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்ததாகவும் இதனாலேயே இந்தத் தலம் பத்தாம்பளை என அழைக்கப் பட்டு, பின்னர் வற்றாப்பளையாக மருவிய தென்பதும் ஒரு ஐதீகக்கதை.

இங்கு மூதாட்டியாக வந்த கண்ணகி, இடைச் சிறுவர்களைக் கண்டு, தனக்குப் பொங்கலிடுமாறு கூற அவர்களும் அதனைச் செய்ததாகவும் - பின்னர் விளக்கேற்றக் கோர, அருகேயுள்ள நந்திக் கடலிலிருந்து நீர் கொண்டு வந்து அவர்கள் விளக் கேற்றிய தாகவும் கூறப்படுகிறது. இன்றும் இக் கோயிலில், கடல் நீரில் தீர்த்தமெடுத்து வைகாசி மாதத்து இரண்டாவது திங்கட் கிழமையில் கோயிலில் விளக்கெரிப்பது ஒரு முக்கியமான மரபாகும்.

இடைச்சிறார்களின் பொங்கல் படையலினால் - பசி தீர்ந்த மூதாட்டி, தனது தலை கடிப்பதாகக் கூற சிறார்கள் அவள் தலையை விலக்கிப் பார்த்தபோது - அங்கு ஆயிரம் கண்கள் தெரிந்ததாகவும் பின்னர் - அம்மூதாட்டி அங்கிருந்து அகன்று விட்டதாகவும்- இதைக் கேட்ட ஊரவர்கள் அம் மூதாட்டி கூறியபடி அவள் கண்ணகி என அறிந்து, அவ்விடத்திலேயே வழிபாடியற்ற ஆரம்பித்ததாகவும் கூறப்படுகிறது.

கண்ணகி அம்மனை வேண்டி - கற்பூரச்சட்டி எடுத்தல், கண்குடம் எரித்தல், பாற்செம்பு எடுத்தல், காவடி ஆட்டம் தீ மிதித்தல் போன்ற சடங்குகளை வழிபாடியற்றுவோர் மேற்கொள்வர். கண் வருத்தம், அம்மை, சின்னமுத்து, கொப்பளிப்பான் போன்ற வெக்கை நோய்களுக்கான நேர்த்தியும் கண்ணகியம்மன் பேரில் இங்கு செய்யப்படுகிறது.

கண்ணகி அம்மன் பொங்கல் காலத்தில் - வழிபடுவோரை நோய், பிணி அணுகாமல் இருக்கப் ‘பரிலயம் கட்டுதல்’ என்னும் சடங்கும் இங்கு நடைபெறுகிறது. தீர்த்தம் எடுத்த தினத்திலிருந்து அம்மன் பொங்கலுக்கு அடுத்த நாளான செவ்வாய்க் கிழமைவரை - கோயிலைச் சுற்றியுள்ள கிராமங்களில் உரல் நிறுத்தி நெல் குற்றப் படுவதில்லை, களியாட்ட நிகழ்வுகள் நடத்து வதில்லை எனப் பல கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும். பொங்கல் முடிவுற்ற செவ்வாய்க்கிழமையன்று குளிர்த்திப் பாடல்கள் பாடப்படுவதோடு, ‘பரிலயம் வழிவிடுதல்’ என்ற நிகழ்வும் நடைபெறும். இந்த நாளன்றே கதிர்காமம் பாத யாத்திரை செல்வோரும் - தம் பயணத்தை வற்றாப் பளையிலிருந்து தெற்கு நோக்கி கடற்கரை யோரமாகத் தொடருவர். அதாவது-கண்ணகி, கதிர்காமம் சென்றதான ஐதீகக் கதையின் பாதை வழியே.

**கண்ணகி பற்றிய வன்னியின் மக்கள் இலக்கியங்கள்**

யாழ்.குடாநாட்டோடு ஒப்பிடுகையில்- நாட்டுப்புறக் கலை, இலக்கியங்கள் செழுமையாகத் திகழும் வன்னி மண்ணில் - கண்ணகி வழிபாட்டுடன் கூடிய மக்கள் இலக்கியங்களுக்கும் நாட்டுப்புறக் கலைகளுக்கும் பஞ்சமில்லை என்றே கூறலாம். இது ஒரு வகையில் - கிழக்கே காணப்படும் செழுமையை

ஒத்திருக்கச் செய்கிறது.

விவசாயிகள் தமது முயற்சிகளுக்குத் தெய்வத்துணை கேட்கும் வண்ணம் அமையும் சிந்துப் பாடல்களில் - வன்னிப் பெரு நிரப்பரப்பிலே - பிள்ளையார், சிவன், முருகன் முதலானவர்களோடு - கண்ணகி அம்மன், நாகதம்பிரான் ஐயனார், விறுமன், அண்ணமார் வதனமார் மீதும் சிந்துகள் பாடப்படுள்ளன[19].

சிலம்பு கூறல் அல்லது கோவலனார் கதை என்ற காப்பியக் கதையை அடியொற்றிய அம்மன் சிந்துவில் - கண்ணகி கதை கூறப்படுகிறது. சிலம்பு கூறலில் உமா தேவியாரே கண்ணகியாக அவதரிப்ப தாகக் கூறப்படுவது முக்கியமானது. மானிடப் பெண்ணொருத்தியைத் தெய்வமாக வழிபட சைவ சமயம் இடந்தராததே இதற்குக் காரணம் என்று - முல்லைமணி வே. சுப்பிரமணியம் கூறுகிறார்[20].

கண்ணகி வற்றாப்பளையில் வந்தமர்ந்ததை அம்மன் சிந்துப் பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகிறது:

***முந்தித் தடங்கிரியில் பாண்டியன் மதுரையை***
***முதுகனல் கொளுத்தியே ஒருசிலம் பதனால்***
***பிந்திவந் தங்கொணாமைக் கடவை தனிலும்***
***பேரான முள்ளிய வளையில் வந்துறைந்தாய்***
***தந்திமுகன் கோயிலில் வந்து மடைகண்டு***
***தார் கடல் உப்புத் தண்ணீர் விளக்கேற்றி***
***அந்திப் பொழுதிலே நந்திக் கடற்கரையில்***
***வைகாசித் திங்களில் வந்தமர்ந்தாயே***
***அடவிக் கடற்கரையில் விடுதிவிட வந்தாய்***
***அழகான மாட்டிடையர் கண்ணலகப்பட்டாய்***

எனப் பாடல் அமைகிறது.

கண்ணகியம்மனின் அருட்பலம் பற்றிய செவிவழிக் கதைகளிலே - 'பனிச்சை ஆடிய கதை' என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னி பறங்கியரால் ஆளப் பட்டபோது, பறங்கித்துரை ஒருவன் வற்றாப் பளை கண்ணகை[21]. அம்மன் கோயிலுக்குச் சென்றான். கண்ணகி அம்மனின் அற்புதத்தைச் சோதிக்க, அருகிலுள்ள பனிச்சை மரத்தைக் காட்டி, அதனை அம்மனால் ஆட்டச் செய்ய முடியுமா என அவன் கேட்டதாகவும் பூசாரியார் அம்மனை வணங்கி, பிரம்பால் மரத்தைத் தட்டியதும் - பனிச்சை மரம் சுழன்றாடியதுடன், பனிச்சம் காய்கள் பறங்கியரைத் துரத்தியதாகவும் இக்கதை அமைகிறது.

'கோவலன் கூத்து' என்பது ஒரு கூத்தாக மட்டுமல்லாது, கண்ணகி அம்மனுக் கான நேர்த்திக்கடனாகவும் வன்னியில் ஆடப்பட்டு வருகிறது. முள்ளியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு, வட்டுவாகல், மணற்குடியிருப்பு, சிலாவத்தை, அளம்பில், செம்மலை, குமுளமுனை போன்ற இடங்களில் - பரம்பரை அண்ணாவியரின் வழிகாட்டலில் - அம்மனுக்குரிய நாள் எனப்படும் திங்கட்கிழமைகளில், கோயில் முன்றலில், வட்டக்களரி கட்டி இக்கூத்து ஆடப்படுவது மரபு. மதுரையைக் கண்ணகி எரித்ததும், அவள் கோபக்கனலை அணைக்க குளிர்ச்சி பாடப்படுவதாகவும் இதனால் - கண்ணகி கோபம் தணிந்து சாந்தமடைவ தாகவும் இக்கூத்து அமைகிறது[22].

இதேவேளை - கோவலன் கூத்துப் பாணியில் அமைந்த வெடியரசன் கூத்தும், வாளபீமன் கூத்தும் - கண்ணகி கதையின் வேறு சில பகுதிகளைத் தொட்டுச் செல்கின்றன. வெடியரசன் கூத்தில் - வெடியரசன் என்ற மன்னனிடம் இருந்த நாகமணிகளே கண்ணகியின் காற்சிலம்பில் வைக்கப் படுவதாகவும், கண்ணகியின் வழியொட்டி வாழ்ந்தவர்களாகக் கூறப்படும் நாச்சிமாரின் கதையைக் கூறுவதாக வாளபீமன் கூத்தும் காணப்படுகின்றன. இவ்வளவு சிறப்புக்கள் இருந்தாலும் - தொடரும். போர் வழியாக, வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் - இன்று யுத்தத்தின் சாட்சியாக அமைந் திருக்கிறது; இழப்புக்கள், வேதனைகளைத் தன்னகத்தே சுமந்திருக்கிறது.

## III கிழக்கில்

ஈழத்தில் கிழக்கிலே மட்டக்களப்பு - அம்பாறை மற்றும் திருகோணமலைப் பகுதிகளிலே கண்ணகி வழிபாடு தொடர்பான ஏராளம் ஏராளம் வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக - அம்பாறை மாவட்டத்தை உள்ளடங்கலாகக் கொண்டிருந்த பழைய மட்டக்களப்புப் பகுதியில் கண்ணகி வழிபாடு பற்றிக் கிடைக்கும் தகவல்கள், தமிழகத்திற்கும் குறிப் பாக - சேர நாட்டிற்கும் ஈழநாட்டிற்கும் இடை யிலான வரலாற்றுகள் தொடர்பைப் பற்றிய பல்வேறு பார்வைளை, பரிமாணங்களை முன் வைப்பதாகவுள்ளன.

### கண்ணகி வழிபாட்டின் தோற்றம் பற்றிய கதைகள்

மட்டக்களப்புப் பகுதியிலே கண்ணகி வழிபாடு தோன்றியமைக்கு - கயவாகு மன்னனுடன் தொடர்புடையதும், முல்லைத் தீவு வற்றாப்பளையிலிருந்து கடல் வழியாக மட்டக்களப்புக்குக் கண்ணகி வழிபாடு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்றதுமான கதைகள் கூறப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலும் வன்னிப் பகுதி யிலும் வழங்கப்பெறும் கண்ணகி வழி பாட்டுத் தோற்றம் பற்றிய கதையாடல்களில் - கண்ணகி வடக்கிலிருந்து கதிர்காமம் நோக்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது என்பதைக் கவனத்தில் கொண்டு கீழ்வரும் செய்திகளைப் பார்க்கலாம்.

கண்ணகி வழிபாடு பற்றி, மட்டக் களப்பிலே எழுந்த ஊர்சுற்றுக் காவியத்தில் - மட்டக்களப்பிலுள்ள கண்ணகியம்மன் வழி பாட்டிடங்களான காரைதீவு பற்றி ஏழு பாடல்களும், வந்தாறுமூலை, செட்டிபாளையம், களுவாஞ்சிக்குடி ஊர்களுக்கு முறையே மூன்று பாடல்களும், வீரமுனை, நீலாவணை என்பவற்றுக்கு முறையே இரண்டு பாடல் களும், ஏனையவற்றுக்கு தலா ஒவ்வொரு பாடலும் வழங்கப் பெறுகையில்-யாழ்ப் பாணத்தில் கயவாகு மன்னன் வந்திறங்கியதும் உருவானதாகக் கூறப்படும் அங்கணாமைக் கடவை கண்ணகி அம்மனைப் போற்றி - இவற்றுக்கெல்லாம் முதலில் நான்கு பாடல்களைப் பாடியுள்ளதும் வடக்கிலிருந்து கண்ணகி வழிபாடு வந்தது பற்றிய கருத்துக்கு வலுச்சேர்க்கிறது[23].

அதேவேளை - மட்டக்களப்புப் பகுதியில் வழங்கப்பெறும் 'கண்ணகையம்மன் குளுத்தி' பாடல்களில் 55ஆவது பாடல் [24] இப்படிச் சொல்கிறது.

**தென்னம்பழம் சொரிய**
**தேமாங் கனியுதிர**
**வன்னி வழிநடந்த**
**மாதே குளுந்தருள்வாய்**

என இடம்பெறும், இப்பாடலில் - 'வன்னி வழிநடந்த' என்னும் வரி, கண்ணகி அம்மன் வழிபாடு வடக்கிருந்து வன்னிவழியாக வந்திருக்க கூடும் என்ற தகவலைத் தெரிவிக்கிறது.

இதேவேளை - தீவின் மத்திய மலைநாட்டுப் பகுதியான கண்டியிலிருந்தே கண்ணகி வழிபாடு மட்டக்களப்புப் பகுதிக்கு வந்திருக்கக் கூடும் என்ற கருத்தை வி.சீ. கந்தையா முன்வைக்கிறார்[25]. அவர் கூற்றுப் படி, கயவாகுவால் கொண்டு வரப்பட்ட கண்ணகி வழிபாடு, சிங்களக் குறுநில மன்னர்களால் கண்டிக்கும் எடுத்துச் செல்லப் பட்டது. கண்டி நாட்டவரும் மட்டக்களப் பாரும் நெருங்கிய வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தது மட்டு மன்றி, காரைத்தீவு - சம்மாந்துறை - வீரமுனை வழியாக மட்டக் களப்பிலிருந்து கண்டிக்குச் செல்வதற்கான பழைய வழியொன்றும் இருந்தது. எனவே கண்டியிலிருந்து வீரமுனை வழியாக - கண்ணகி வழிபாடு மட்டக் களப்பிற்கு வந்திருக்கலாம் என்ற கருத்துக்கும் வாய்ப் புள்ளது. தெற்கிலிருந்து வடக்கு நோக்கி 'கண்ணகையம்மன் பறந்து வந்தனள்' என்று மட்டகளப்பில் வழங்கும் கதைகளும் இதனைச் சுட்டுகின்றன என்கிறார் வி.சீ. கந்தையா.

இதற்கு - கண்ணகி வரலாற்றுப் புகழ்பாடும் உடுக்குச் சிந்தின் 71ஆவது பாடல் இப்படி வலுச்சேர்க்கிறது.

**"பட்டிநகர் தம்பிலுவில், காரைநகர், வீரமுனை**
**பவிசுபெறு கல்முனை, கல் லாறு, மகிழுர்,எருவில்**
**செட்டி பாளையம், புதுக்குடியிருப்பு, செல்வ**
**முதலைக் குடா, கொக்கட்டிச் சோலை,**
**அட்ட திக்கும் புகழு வந்தாறு மூலை,**
**அன்பான சிற்றாண்டி நகரதனில் உறையும்**
**வட்டிவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை**
**மனதினில் நினைக்க வினை மாறியோ டிடுமே"**

என்று கண்ணகி கோயில் கொண்ட ஊர்கள் சில மட்டகளப்பின் தென்கோடியிலிருந்து வடக்கு நோக்கியே வரிசைப்படுத்தப் படு வதையும் அவர் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்.

இப்பட்டியலில் இடம்பெறாத - துறைநீலாவணை, களுவாஞ்சிக்குடி, ஆரப் பற்றை (இன்று ஆரையம்பதி), களுதாவளை, தாண்டவன்வெளி, கோறாவெளி முதலான பகுதிகளிலுள்ள கண்ணகியம்மன் ஆலயங் களும் - மேலே குறிப்பிட்ட பாடலில் வரும் ஆலயங்களும் - கண்ணகி வழிபாடு தமது கிராமத்தில் தோற்றம் பெற்றதைக் குறித்தான பழமையான ஐதீகக் கதைகளைத் தனித் தனியாகக் கொண்டுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

இதேவேளை - கண்ணகி அம்மன் ஊர்சுற்றுக் காவியத்தில் இறுதிப் பகுதி யிலுள்ள பாடல் ஒன்றில் கண்டியிலிருந் திருக்கக் கூடிய கண்ணகியம்மனைப் போற்று வதாக - 'காமனகர் வாழ்குளக் கண்டியுள மாதே' என வரியொன்று வருவதும் இங்கு கவனிக்கத்தக்கது[26].

இது இவ்வாறிருக்க - முதலாம் கயவாகு மன்னன் காலத்திலும், பின்னர் இரண்டாம் கயவாகு மன்னன் காலத்திலும் சேர நாட்டு மக்கள், ஈழத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அவர்கள் மட்டக்களப்பு மாநிலத்தில் குடி யமர்த்தப்பட்டதைச் சுட்டிக்காட்டும் கலாநிதி இ. பாலசுந்தரம்[27] - இம்மக்கள் கூட்டம், சேரநாட்டுப பண்பாட்டுடன் கொண்டிருந்த தொடர்ச்சித் தன்மையைத் தளமாகக் கொண்டு, கண்ணகி வழிபாடு மட்டக் களப்பில் வலுப்பெற்றதற்கான ஆதார நிலை களை முன்வைக்கிறார். மட்டக்களப்பு நாட்டார் இலக்கியங்கள் அடிப்படையிலும் கேரளத்தின் நாட்டார் இலக்கியங்கள் அடிப்படையிலும் குறிப்பாக, கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய தளத்தில அவரது வாதம் இவ்வாறு அமைகிறது:

கேரள நாட்டில் நாட்டார் இலக் கியமாக வழங்கப்பெறும் 'தோற்றம் பாட்டு', 'மணிமங்க தோற்றம்', 'முடிப்புரைப் பாட்டு' என்பன கண்ணகி கதையைக் கூறுகின்றன. இவை - கண்ணகி கோயில்களில் வழிப்பாட்டுக் காலங்களில் படிக்கப்படுவனவாகும். இவற்றைப் போன்றே, மட்டக்களப்பு மாவட்டத்தில்

நாட்டார் இலக்கிய வழக்கிலுள்ள -கண்ணகி வழக்குரை, கண்ணகியம்மன் உடுக்குச் சிந்து, கண்ணகி அம்மன் ஊர் சுற்றுக் காவியம், கண்ணகி அம்மன் ஊஞ்சல், குளுத்திப் பாடல்கள், கோவலன் கதை, வாரப்பாடல்கள், வசந்தன் பாடல்கள் ஆகியன - கண்ணகியம்மன் கோயிற் சடங்குக் காலங்களில் பயபக்தியுடன் பாடப்படுகின்றன. கேரள த்தைப் போன்றே மட்டக்களப்பிலும் 'கலியாணப் படிப்பு', 'வழக்குரைப் படிப்பு' என்ற வழக்காறுகளும் காணப்படுகின்றன. கொடுங்கலூர் கண்ணகியம்மன் கோயில் திருவிழாக் காலங்களில், அங்கு கூடுவோர் அம்மனைக் குறித்துப் பாடும் பாடல்கள் பிரசுரிக்க முடியாதனவாகவும் அவற்றைப் பிரசுரிக்கக் கூடாது என்ற மரபு கொண்டன வாகவும் அமைந்துள்ளன. மட்டக்களப்பில் கண்ணகி அம்மன் வழிபாட்டுடன் தொடர் புடைய கொம்பு முறித்தல், போர்த் தேங்காயடித்தல், தேர்த்தட்டு ஊர்வலம் ஆகிய நிகழ்ச்சிகளின் போது பாடப்படும வாரப் பாடல்களும் மேற்குறிப்பிட்ட பாடற் பொருளைச் சார்ந்தனவாகவே காணப் படுகின்றன. இவ்விரு நாடுகளிலும் வழங்கும் கண்ணகி கதைகளின் தொடக்கமும் முடிவும் ஒத்துக் காணப்படுகின்றன, என்கிறார் கலாநிதி இ. பாலசுந்தரம்.

இவற்றினடிப்படையில்-சேரநாட்டவரின் நேரடி வருகையோடு அல்லது குடியமர்வோடு கண்ணகி வழிபாடு மட்டக்களப்பில் தோற்றம் பெற்றிருக்க அல்லது வலிமையடைந்திருக்க வாய்ப்புக்கள் உள்ளன என்பதை இங்குச் சுட்டிக்காட்டலாம். இது ஒருவகையில் - ஈழத்தின் ஏனைய பகுதிகளைவிட கண்ணகி வழிபாடு, மட்டக்களப்போடு தனித்த தன்மையுடன் தொடர்புறுவதை எடுத்துக் காட்டுகிறது.

அதே வேளை, மருமக்கள் தாயமுறை, மந்திரப்பயிற்சி, தேங்காய் கலந்த உணவு வகைகள், தலைக்குத் தேங்காய் எண்ணெய் பூசுதல். வீடமைப்பு முறை, வேலியடைப்பு முறை மற்றும் பழக்க வழக்கங்களில் - ஒரு சிலவற்றைத் தவிர, ஏனைய பல ஏறத்தாழ யாழ்ப்பாணச் சமூகத்திலும் காணப்பட்டன / காணப்பட்டு வருகின்றன என்பதும் ஆய்விற் குரியதாகும்.

இதுகுறித்து - பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை குறிப்பிடும்போது கன்னக் குடுமி, பேச்சுமொழி, யாழ்ப் பாணத்தின் தேசவழமைச் சட்டத்திற்கும் மருமக்கள் தாயமுறைமைக்குமான தொடர்பு உள்ளிட்ட விடயங்களை யாழ்ப்பாணத்திற்கும் சேர நாட்டிற்கும் இடையேயான ஒற்றுமைப் பண்புகளினடிடப்படையில் பேசுவதும்[28] - ஆனால், இத்தகைய தொரு தொடர்பு களிருந்தும் மட்டக்களப்பில் நிலவுவதான கண்ணகி வழிபாட்டின் செழுமை, யாழ்ப் பாணத்தில் இல்லாமற்போனமைக்கான காரணிகள் பற்றிய தேடலும் ஆய்வும் பரந்தே இருக்கின்றன என்கிறார்

இதேவேளை - மட்டக்களப்பின் வரலாற்றைக் கூறும் 'மட்டக்களப்பு மான்மியம்' மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு தோற்றம் பெற்றது பற்றி வேறொரு கதையைக் கூறுகிறது[29]. இதன்படி - யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவம் பரப்பப்பட்டபோது, அங்கிருந்த கந்தப்பர் என்பவர் - இனி இந்நகரம் தமிழ் விலகிக் கிறிஃஸ்தவமே பெருகி வருமென்று நினைத்து, தனது சகோதரிகள் இருவருடனும் மகள் ஒருத்தியுடனும் - ஏழு நாடார் குடும்பங்களையும் ஏழு கண்ணகை அம்மன் விக்கிரகங்களையும் கோவியர் சமூகத்தைச் சேர்ந்த ஏழு ஆலய ஊழியக் குடும்பங்களையும் மூன்று நம்பிக் குடும்பங் களையும், அவர்களது வைரவர் விக்கிரகங் களுடன் ஒரு சிறு படகிலேறி - மட்டக்களப்பு மண்முனையில் வந்திறங்கினார். அங்கு ஒரு கிராமத்தை உருவாக்கி, ஏழு கண்ணகி விக்கிரகங்களையும் இருத்திப் பூசை செய்வித்து வந்தார். ஆனால், மட்டக்களப்பின் குறுநில மன்னன் ஒருவன், கந்தப்பர் - போர்த்துக்கேயரின் உளவாளியாயிருக்கலாம் எனச் சொல்லி - அப்போது, மட்டக்களப்பின் ஆட்சியைப் பரிபாலித்து வந்த கண்டி அரசன் விமலதருமனுக்குச் செய்தி அனுப்ப, அவன் கந்தப்பரையும் சகோதரிகளையும் கொல்லவும், புத்திரியை மண்முனைக் காலிங்க குலத்தவ னுக்கு மணமுடித்து வைக்கவும், ஏழு கண்ணகி விக்கிரகங்களில் - ஆறினை வெவ்வேறு ஊர்களில் பிரதிட்டை செய்து நாடார்களைப் பூசகராசவும் கோவிய குலத்தவர்களைக் கோயில் ஊழியஞ் செய்ய உத்தர விட்டதாகவும் - 'மட்டக்களடப்பு மான்மியம்' கூறுகிறது.

இவ்வாறு கூறப்படும் தோற்றுவாய்கள் எப்படியிருப்பினும் மட்டக்களப்பிலே முதன்மை பெற்றுக் காணப்பட்ட பெண் தெய்வ வழிபாடும், குறிப்பாக கிராமியத் தேவதைகள் வழிபாடும், மந்திரத்துடன் கூடிய நம்பிக்கைகளும் - கண்ணகி வழிபாட்டை ஊக்கப்படுத்த உதவியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அத்தோடு - கலைவஞ்சி, செட்டிச்சி, மகிழரசி, மங்கியம்மை, இராசம்மை, வீரமுத்து, பாலம்மை, ஆடக சவுந்தரி, உலகநாச்சி போன்ற பெண்ணரசி களின் தலைமையில் வழிநடந்த சமூகக் குழுக்களும், சிற்றரசுகளும் நிலவியது இந்த மண்ணிலேயே என்பதும்[30] கண்ணகி போன்ற பெண் தெய்வ வழிபாட்டை இன்னமும் ஊக்கப்படுத்தியிருக்கலாம்.

ஆகமநெறிகள் இல்லாத, நாட்டார் தெய்வ வழிபாட்டின் மையங்களாகத் திகழும்

மட்டக்களப்பின் கண்ணகி வழிபாட்டிடங்கள் - ஈழத்தின் ஏனைய தமிழ்ப்பகுதிகளைப் போலல்லாமல், குறிப்பாக - யாழ்ப்பாணத்தின் 'சமஸ்கிருதமயவாக்கல்' பாதிப்பைப் போலல் லாது, பார்ப்பனீய ஆதிக்கம் சாராமல் தனித்துவத்துடன் இன்றும் திகழ்வது, மட்டக்களப்பு மண்ணும் மக்களும் - தமக்கான கிராமிய வாழ்வின் அடித்தளத்திலிருந்து பிறழ்ந்து போய்விடாமல் இருக்கும் ஓர் மத்தையே சுட்டி நிற்கிறது.

கண்ணகியின் கோபம் குறித்த மக்களின் நம்பிக்கையினடிப்படையில் - தவறுகள் செய்யாதிருப்பதும், கண்ணகியைச் சமாதானப்படுத்துவதன் மூலம் அல்லது கோபம் தணிவிப்பதன் மூலம் - தன்னளவிலும், சமூக அளவிலும் நல்ல விளைவுகளைப் பெறலாம் என்ற மக்களின் எதிர்பார்ப்பும் பயபக்தியும் இப்பகுதி மக்களிடையே வலுப் பட்டுக்கிடப்பதை உணரமுடிகிறது.

மேலும், நேர்த்திக் கடனாக - தங்கம், வெள்ளியாலான பொருட்கள் மட்டுமன்றி, மக்கள் தமதளவில் தம்மாலியன்றவாறு தாம் வளர்க்கும் கோழிகள், ஆடுகள் போன்ற கால் நடைகளையும் கண்ணகி அம்மனுக்குத் தரும் மரபு இங்கு பெருமளவில் காணப்படுவது - தெய்வத்திற்கும் மக்களுக்குமான நெருக் கத்தையும் - அவரவர் தளத்திலிருந்தே தெய்வ த்தை அணுகுவதற்கான ஏது நிலை களையும் சுட்டிக்காட்டுகிறது.

### சடங்குகள் , நாட்டார் இலக்கியங்கள், விளையாட்டுகளுடன் கண்ணகி வழிபாடு

கண்ணகியம்மன் வழிபாடு - கிராமியத் தெயவ வழிபாட்டின் தளத்தில், பல சடங்குகளுடன் நடைபெறுவதையும், நாட் டார் இலக்கியங்கள் வழி கண்ணகி வழிபாடு விதந்துரைக்கப் பெறுவதையும் - ஈழ நாட்டில் பரவலாகக் காணும்போதும், மட்டக்களப்பில் இவற்றின் செல்வாக்கு என்பது, கண்ணகி வழிபாட்டை முற்றிலும் ஆரத்தழுவியதாகவே நிறைந்து காணப்படுகின்றது. நாட்டார் சடங்குகள், இலக்கியங்கள் மட்டுமன்றி, கிராமிய விளையாட்டுக்களின் வழியேயும் - கண்ணகி வழிபாடியற்றப்படுவது மட்டக் களப்பின் விசேடத்துவமாகும்.

மட்டக்களப்பில் கண்ணகியம்மன் பூசைகள் 'சடங்கு' என்னும் பெயரிலே அழைக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் வைகாசி மாத வளர்பிறை நாட்களில் நடைபெறும் இந்தச் 'சடங்கு' - வைகாசி மாத பூரணைக்கு - சில நாட்களுக்கு முன்னர், கண்ணகி கோயில் திறக்கப்பட்டதிலிருந்து ஆரம்பமாகும்[31].

மந்திர பூசையுடன் தொடங்கும் 'கதவு திறத்தல்' நிகழ்விலிருந்து, அம்மன் காவியம், உடுக்குச் சிந்து பாடுதல், சாமியேறுவோரின் உரு என்பவற்றைத் தொடர்ந்து - 'கல்யாணக் கால் வெட்டுதல்' என்ற விசேட சடங்கும் 'கல்யாணப்படிப்பு'ம் நடைபெறும். இறுதி யாக, பூரணை தினத்தில் (வைகாசிப் பருவம்) 'குளுத்தி'யுடன் விழா நிறைவெய்தும். குளுத்தியன்றிரவு பொங்கல் படைப்பதுடன், இனிமையும் குளிர்மையும் நிறைந்த பழங்களும், வாசனைத் திரவியங்களும் சேர்க்கப்பட்ட குளுத்திப் 'பாணக்கம்' வழிபாடியற்றோ வோருக்கு வழங்கப்படுதல் சிறப்பானதாகும்.

### குளுத்திப் பாடல்

கண்ணகியின் கோபத்தைத் தணிப் பதற்குப் பாடப்படும் பாடல்கள் 'குளுத்திப் பாடல்கள்' எனப்படும்[32].

***தட்டான் பொடியாகத் தார்வேந்தன் நீறாகச்***
***சுட்டெரித்துப் போட்டதொடு தோகாய்குளுந்தருள்வாய்***
***எல்லை படும்பழிக்கு என்னவொண்ணாப் பழிவாங்கிச்***
***சொல்லரிய மாமதுரை சுட்டாய் குளுந்தருள்வாய்***
***மதுரா புரித்தெய்வம் வாய்மாற்றந்தான் கேட்டுச்***
***சதுராக வேகம் தணிந்தாய் குளுந்தருள்வாய்***

என்பது போன்றதாக குளுத்திப்பாடல்கள் அமையும், இவற்றில் கண்ணகியின் வரலாறும், சிறப்பும் முற்பகுதிகளில் இடம்பெறும்.

### கண்ணகி வழக்குரை

கண்ணகி உரைத்த வழக்கின் அடிப்படையில் - அப்பெயர் கொண்டு 'வழக்குரை' எனவும் 'வழக்குரை காவியம்' எனவும் இந்த இலக்கியம் அழைக்கப்படுகிறது. இந்த வழக்குரையில் - வரம்பெறு காதை முதல் குளிர்ச்சிக்காதை ஈறாக பதினொரு காதைகள் இடம்பெறும் என்றும், சில ஏட்டுப் பிரதி களின்படி - பதினொரு காதைகளின் உட் பிரிவுகளும் சேர்க்கப்பட்டு, இருபது காதைகள் மொத்தம் எனவும் கூறப்படுவதுண்டு என்று பண்டிதர் வி.சீ. கந்தையா கூறுகிறார்[33].

கண்ணகி வழக்குரையில் - பராசர முனிவரின் மகள், சிவனின் அருளால் பூமியில் பிறக்க வரம் கிடைத்ததாகவும், மாங்கனியாக அரசனுக்குக் கிடைத்த அப்பெண் குழந்தை - பின்னர் பேழையொன்றில் விடப்பட்டதாகவும், அது - காவிரிப்பூம்பட்டினத்து வணிகனுக்குக் கடலில் கிடைக்க, குழந்தை கண்களில் ஒளியும், மகிழ்வும் கண்ட அவன் - 'கண்ணகி' எனப் பெயரிட்டு பேழையில் கண்டெடுத்த குழந்தை யை வளர்த்ததாகவும் கூறப்படுகிறது.

இக்கண்ணகி வழக்குரையில் கூறப் படும் - கண்ணகி சிலம்பில் காணப்படும் நாக மணிக்குச் சொந்தக்காரனான வெடியரசன் பற்றிய கதை, வன்னிப் பெருநிலப்பரப்பில் தனியாக 'வெடியரசன் கூத்து' என ஆடப்பட்டு வருவது இங்கு கவனிக்கத்தக்கது.

### அம்மன் பள்ளு

அம்மன் - பள்ளு பாடல்களில் கண்ணகியின் தோற்றம் பற்றிய கதை சற்று மாறுபடக் காணப்படுகிறது. பாண்டியனது பேரவையில் மாதவியின் நடன அரங்கேற்றம் நடந்ததென்றும், அந்நடனச் சிறப்புக் கண்டு, மகிழ்ந்து சிரித்த அரசன் - தன்னை மறந்து, அவளை வியந்தான் எனக் கோபம் கொண்ட மதுரையின் தெய்வமான பரமேஸ்வரியின் நுதல்விழியிலிருந்து பறந்த கோபப் பொறி ஒன்றே மாங்கனியாயிற்று; அதுவே பின்னர் கண்ணகியானது என்று கூறப்படுகிறது[34].

### வசந்தன் ஆடல் / வசந்தன் கூத்து

பன்னிருவர் வட்டமாக நின்று, கோல் கொண்டு தாளம் பிசகாது ஆடும் இந்த ஆடலில், கண்ணகியின் வரலாற்றோடு விவசாயம் உட்பட பல்வேறு விடயங்கள் பாடலாகப் பாடப்படுகின்றன[35]. அம்மன் வசந்தன், கள்ளியங்கூத்து வசந்தன் பள்ளு, செல்லப்பிள்ளை வசந்தன், குயில் வசந்தன், தொங்கல் வசந்தன், ஆறுகம்பு வசந்தன், முசுற்று வசந்தன், தம்பாப்பிள்ளை வசந்தன், பாங்கி வசந்தன், ஆட்கண்டு மீண்டான் வசந்தன், கும்மி வசந்தன், பல்லக்கு வசந்தன், கப்பல் வசந்தன், வேளாண்மை வசந்தன் எனப் பல்வேறு வசந்தன் பாடல்களைச் சுட்டிக் காட்டுகிறார் பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்[36].

### ஏனைய நாட்டார் பாடல்களில்

மட்டக்களப்புப் பகுதியில் வழங்கப் பட்ட / வழங்கப்படும் நாட்டார் பாடல்களிலும் கண்ணகி பற்றிய குறிப்புகள், வழிபாடு என்பன இடம்பெறுவதை - கலாநிதி இ. பாலசுந்தரம் காட்டுகிறார்[37]. கடலில் மீன்பிடிக்கச் செல்வோர் - தண்டு வலிக்கும் போது பாடும் பாடல் களிலும், வயல் வேலை களில் ஈடு படுவோர் பாடல்களிலும் என உழைக்கும் மக்களின் பாடல்களில் - தெய்வ நம்பிக்கைக்குக் கண்ணகி வேண்டப்படுவதை இப்பாடல்கள் காட்டுகின்றன.

### கொம்பு விளையாட்டு

மட்டக்களப்பில் கண்ணகி அம்மன் வழிபாட்டில் - கொம்பு விளையாட்டுக்கு முக்கிய இடமுண்டு. கொம்பு விளையாடுவதன் மூலம், கண்ணகியின் கோபத்தைச் சாந்தப் படுத்த முடியும் என்ற நம்பிக்கை இம் மக்களிடையே உள்ளது.

மதுரையை எரித்ததும், இடையர் சேரிக்குக் கண்ணகி வந்ததாகவும், அவள் சீற்றத்தைத் தணிக்க, விளையாட்டாக இடைச் சிறுவர்கள் - மஞ்சள் கொம்புகள் இரண்டை எடுத்து, ஒன்றை ஒன்று கொழுவி இழுத்து விளையாடிய வேளை, ஒரு கொம்பு முறிய - மற்றைய கொம்பு இழுத்த அணி வென்றது என்றும், கண்ணகியின் கொம்பே வென்றது என்று இடையர்கள் ஆடிப்பாட, அவள் கோபம் தணிந்து குளிர்ந்தாள் என்றும் - இங்கு ஐதீகக் கதையொன்று நிலவுகிறது[38].

கொம்பு விளையாட்டின் முக்கியத்துவம் கருதி, மட்டக்களப்பின் பழமை வாய்ந்த கண்ணகி அம்மன் கோவில்களில், கருவறையின் இருமருங்கிலும் - கொம்பு விளை யாட்டுப் பொருட்கள் வைக்கப் படுவதற்கான கொட்டறைகள் அமைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிய வருகிறது[39]. இவ்வாறானதொரு கொம்பு விளையாட்டு, ஈழநாட்டில் சிங்களர்கள் மத்தியில் - பத்தினித்தெய்வ வழிபாட்டின் அம்சமாக, சற்றே வேறுபாடுகளுடன் இருப்பதும், அங்கும் பத்தினியை மகிழ்வித்து அவள் அருளைப் பெறுவதாக விளையாட்டு நடத்தப்படுவதும் கவனிக்கத்தக்கது.

### இன்று ...

போரின் களமாக மட்டகளப்புப் பகுதியும் மாறிவிட்ட நிலையில் - மக்களின் அவலங்களைச் சொல்லவும், வெளிப் படுத்த வுமான அரங்கம் உள்ளிட்ட நிகழ்வு களில் - கண்ணகியின் வாழ்வும் போராட்டமும் - உள்ளீர்க்கப்படுவதை ஒத்திசைவாகப் பார்க்கப் படுவதை இன்று காணமுடிகிறது.

கிழக்குப்பல்கலைகழக விரிவுரையாளரும், நாடகத் தாயாரிப்பாளருமான பாலசுகுமாரின் 'கொங்கைத்தீ' சூர்யா அபிவிருத்தி நிலைய கலாசாரக் குழுவின் நாடகப் பணியாக வெளிவந்த 'மட்டுநகர்க் கண்ணகிகள்' இவற்றில் முக்கியமானவை[40].

### IV . தெற்கில் சிங்கள பௌத்த மக்களிடையே ..

சிலப்பதிகாரம் - முதலாம் கயவாகு மன்னன் காலத்தில் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது என் பதைக் கூறும் அதேவேளை, இலங்கையில் பத்தினி வழிபாடு என்பது - கண்ணகி வழி பாட்டிற்கு முன்பே இருந்து வந்த பழமை வாய்ந்த, ஆனால் பௌத்த தெய்வ வழி பாடாக இருந்தது என்பதைச் சிங்கள அறிஞர்கள் ஒரு சிலர் கூறுகின்றனர். இவ் விரண்டு கருத்துகளையும் மறுத்து - கண்ணகி வழிபாடு அல்லது பத்தினித் தெய்வ வழிபாடு என்பது பிற்காலப் பகுதியிலேயே, அதாவது - சிலப்பதிகாரக் காலத்திற்கு மிகப் பிந்தியே இலங்கைக்கு வந்தது என்ற கருத்தைப் பேராசிரியர் கணநாத் ஒபயசேகர போன்றோர் முன்வைக்கின்றனர்.

முதலாம் கயவாகு கொண்டுவந்த - கண்ணகி வழிபாடே, பத்தினி வழிபாடாக சிங்களப் பகுதிகளில் ஏற்கப்பட்டது என்பதற்கு - அவன் ஆரம்பித்து வைத்த, 'பெரஹரா' (*Perehara*) என்ற தெய்வ உலா ஒரு ஆதாரமாகும்.

ஆடி மாதத்தில் - கண்டியில் நடைபெறும் இப் 'பெரஹரா' - பிரகாரம் என்பதன் மருவிய வடிவமே என்பதும், நாத - விஷ்ணு - கதிர்காம (முருகன்) - பத்தினி என்ற நான்கு தெய்வங்களையும் பூசிப்பதாகவே இந்த 'பெரஹரா' 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை நடத்தப்பட்டதையும், இந்தப் பெரஹராவில் பூக்கள் தொங்கவிடப்பட்ட வர்ணமூட்டப்பட்ட தடியானது புனிதப் பொருளாக மரியாதை செய்யப்படுவதையும் - இது பற்றி சிலப் பதிகாரம் குறிப்பிடும் முக்கியத்துவத்தையும் சுட்டும் பேராசிரியர் எஸ். கணேசன்[41] - இந்த ஒப்புவமைகள் மூலம், கண்ணகி வழிபாடு - பத்தினித் தெய்வ வழிபாடாக சிங்களப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது என்கிறார்.

கயவாகு ஆரம்பித்த பெரஹரா இன்றும் 'எசல பெரஹரா' (*Asela Perahara*) எனத் தொடர்வதும் - பத்தினித் தெய்வக் கோயில்கள் பல - சிங்களப் பகுதிகளில் உருவாக்கப் பட்டமையும் மறுக்க முடியாததே. அதிலும் குறிப்பாக - கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கிச் செல்லும் வீதியில், நவகமுக தேவாலயம் (*Navagamuwa Devalaya*) - பத்தினி தெய்வத்தின் பேர் சொல்லும் வழி பாட்டிடமாக இருந்துவருகிறது.

தமிழ்ப்பகுதிகளில் - குறிப்பாக, மட்டக்களப்பில் கண்ணகி வழிபாட்டில் இடம்பெறும் கொம்பு முறித்தல் விளை யாட்டைப் போலவே-சிங்களப்பகுதிகளில் பத்தினி தெய்வத்தின் அருளாசி வேண்டி - அங்கெலி (*Ankeli*) எனும் விளையாட்டு, கொம்பு முறித்தலின் பாணியிலேயே ஆடப்பட்டு வருகின்றது[42]. இந்த விளையாட்டை 'சாந்தி கர்மய' (*Shanti Karmaya- Healing rite*) என மக்கள் அழைப்பதன் மூலம் - பத்தினித் தெய்வத்தைக் குளிர்விக்க நடக்கும் சடங்காக, கண்ணகி வழிபாட்டை மிக ஒத்தமுறையில் அது அமைவதை நோக்கலாம். இதைவிட - சிங்கள நாட்டுப்புற நாட்டிய நாடகமான சொக்கரி (*Sokari*), போர்த் தேங்காய் அடித்தல் (*Pora Pol*), கம்மடு (*Gammadu*) எனப்படும் பாடலும் பிரார்த்தனையும் கூடிய நிகழ்வு, 18 வகை முகமூடிகளை அணிந்தவாறு ஆடப்படும் கீழைநாட்டு நடனம் (*Low Country Dance*) அல்லது ருகுணு நடனம் (*Ruhunu Dance*)[43] என்பவை பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடைய சிங்கள நாட்டுப்புற நிகழ்வுகளாகவுள்ளன.

சிங்கள மக்களிடையே வழங்கும் பத்தினி பற்றிய ஐதிகக் கதைகளில் - பத்தினி ஏழு அவதாரங்கைக் கொண்ட தெய்வமாக - நீர், யானைத் தந்தம், பூ, தீப்பொறி, உடுதுணி, மாங்கனி ஆகியவற்றிலிருந்து தோற்றம் பெறுவதாக ஒரு கதையுள்ளது. இவற்றோடு - மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் நாட்டுப் புற இலக்கியங்களில் கூறப்படும் - தீப்பொறி, மாங்கனி ஆகியவற்றிலிருந்தான கண்ணகியின் தோற்றக் கதைகளையும் ஒப்புநோக்கி ஆராய வழியிருக்கிறது.

கோவலனை - பலங்க (*Palanga*) என அழைக்கும் மரபும், பத்தினி வரலாற்றுக் கதைகளைக் கூறும் - வயந்திமாலய (*Vayantimalaya*), பத்தினிகல (*Pattinihalla*), பலங்க - கல (*Pallanga - halla*) போன்ற சிங்கள இலக்கியங்களும் கவனிக்கத்தக்கன[44].

தமிழகத்திலே இருந்து கண்ணகி வழிபாடு, ஈழத்திற்கு வந்ததைப் பற்றி ஆராயும்வேளை - ஈழத்திலிருந்து சோழ நாட்டிற்குக் கண்ணகி / பத்தினி வழிபாடு வந்ததைப் பற்றி வித்துவான் வி.சீ. கந்தையா மட்டக்களப்பு தமிழகத்திலே பின்வருமாறு கூறுகிறார்.

*11 ஆம் நூற்றாண்டில் - சோழன் இராஜராஜன். சிங்கள மன்னன் ஐந்தாம் மகிந்தனை வென்று, அவனையும் அவன் மனைவியையும் சிறைப்பிடித்துச் சென்றான். தஞ்சையில் அவர்கள் காவலில் வைக்கப் பட்டபோது - மகிந்தனின் மனைவி விரும்பி யதற்கிணங்க - அங்கு வைத்து கண்ணகி வழிபாடியற்ற ராஜராஜன் அனுமதித்தான். சோழநாட்டிலே கண்ணகி வழிபாடு மறைந்து போயிருந்த அவ்வேளை - சிங்கள நாட்டி லிருந்து தம்மூருக்கு வந்த தெய்வமாக - மகிந்தனின் மனைவி வழிபட்ட கோயிலை, 'சிங்களநாச்சி' என மக்கள் அழைத்தனர். இது, பிற்காலத்தில் மருவி, 'செங்களாச்சி' என்பதாக மாறியது. தஞ்சைப் பெருங் கோயிலுக்கு அணித்ததாக, இந்த ஆலயம் அமைந்து காணப் பட்டது என்கிறார் வி.சீ.கந்தையா[45].*

இத்தகவல் மூலமும் - கயவாகு மன்னனுக்குப் பின்பும் பத்தினி வழிபாடு ஈழத்தில் சிங்களப்பகுதிகளில் உறுதியாயிருந்ததைக் காணமுடியும்.

### பிற்காலத்தில் வந்த கண்ணகி வழிபாடு

பேராசிரியர் கணநாத் ஒபேசேகர, பேராசிரியர் எஸ். பரணவிதாரண ஆகியோர் கூறும் கருத்துகளின்படி - சிங்கள மக்களி டையே பத்தினி வழிபாடு 13ஆம் நூற் றாண்டிலேயே - தீவுக்கு வந்த வர்த்தகர்களால் அறிமுகமானதாகவும், கோட்டையை ஆண்ட ஆறாம் பாரக்கிரமபாகு காலத்தில் 14 ஆம் நூற்றாண்டிலேயே பத்தினி தெய்வத்திற்கான முதற்கோயில் சிங்களப்பகுதியில் எழுந்ததாகவும் கூறுகின்றனர். சிங்களவர்கள் மத்தியிலான பத்தினி வழிபாட்டுக்குக் கிடைக்கும் எழுத்துப் பூர்வமான ஆதாரங்கள், 15ம் நூற்றாண்டி லேயே கிடைப்பதை இவர்கள் தமது கருத்துக்குத் துணையாகக் கொள்கின்றனர்.

1511 ஆம் ஆண்டளவில் உருவாக்கப் பட்ட கடலதெனிய (*Gadaladeniya*) கல்வெட்டின் படி, மத்திய மலைநாட்டின் காவல் தெய்வங்கள்

நான்கிலும் ஒரு தெய்வமாக பத்தினி கொள்ளப்படுகிறாள் என்பதைச் சுட்டிக் காட்டும் பேராசிரியர் எஸ். பத்மநாதன்[46] - கண்டியில் புத்தரின் புனிதப்பல் வைக்கப் பட்டிருந்த தலதா மாளிகையைச் சுற்றிவரக் காணப்படும் விஷ்ணு, நாத, ஸ்கந்த தெய்வங்களுடன் பத்தினி இடம்பெறுவது - கண்டியின் முதல் அரசனான செனசமத்த விக்ரமபாகு (*Senasammata Vikramabahu*) காலத்தில் நடைபெற்ற முக்கியமான சேர்க்கை என்கிறார்.

பௌத்தமயமாக்கப்பட்ட தெய்வங்கள் வரிசையில் பத்தினியும் இணைக்கப்படுவது பற்றிக் குறிப்பிடும் சிங்களப் பேரகராதியின் ஆசிரியரான பேராசிரியர் *K.N.O.* தர்மதாச[47], விஷ்ணு - ஸ்கந்த போல பத்தினியும் ஒரு பௌத்த தெய்வமே என்றும், சிங்கள பௌத்த மரபில் - இந்து தெய்வங்கள் பல பௌத்த மயமாக்கப்பட்டு ஏற்கப்பட்டிருக்கின்றன என்றும் கூறுகிறார்.

எனினும், இந்து மதத்தின் பெருந் தெய்வங்களாக பிரம்மா, விஷ்ணு, சிவனாக இருந்தாலென்ன, சிங்கள மக்களின் நாட்டுப் புறத் தெய்வங்களான சக்ர, சமன், உபுல்வன், பிட்டிய தெவியோ, பனம் பண்டார, பத்தினி ஆக இருந்தாலென்ன - இவையாவும் சிங்கள பௌத்தத்தின் அடிப்படையில், வெறும் பரிவாரத் தெய்வங்களாகவே (*Subordinate to Buddha*) ஏற்கப்படுகின்றன.

சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் பத்தினித் தெய்வ வழிபாடும், ஏனைய இந்து மதக் கடவுள்கள் தொடர்பான வழிபாடும் இன்றும் மிகப் பெருமளவில் காணப் பட்டாலும் - தமிழர்களது வழிபாட்டை, அதே தெய்வங்களின் அடிப்படையிலும் ஏற்றுக் கொள்ளாத குறுகிய இனவாதப் போக்கே பரவலாக காணப்படுகிறது. பத்தினி தெய்வத்தை வழிபடும் சிங்கள பௌத்தர் களால் - திருகோணமலை கிளிவெட்டியில் அமைந்திருந்த நீலாப்பளை பத்தினியம்மன் கோயில் - 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் அழிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான கோயில் களில் ஒன்றாக இருந்தது முதலாக - அதற்கு முன்னரும், இன்று பின்னருமாக இந்த ஒடுக்கு முறை தொடரவே செய்கிறது.

**இறுதியாகச் சில குறிப்பிடுதல்களுடன் -**

- ஈழத்தில் கண்ணகி வழிபாடென்பது, பொதுமைத் தன்மைகள் - தொடர்ச்சித் தன்மைகள் எனப் பலவற்றைக் கொண்டிருந் தாலும், பிரதேச ரீதியாகவும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விசேட தன்மைகள் காணப்படவே செய்கின்றன.

- கண்ணகி வழிபாட்டின் தோற்றம், பரவுகை, கிராமியப் பண்பு, நீடித்த தன்மை - செழுமை, மாற்றங்கள், வழிபடுவோரின் இயல்பு எனப் பல தளங்களிலும் அறியப்படும் வேறு பாடுகள் வழியே - யாழ், குடாநாடு, வன்னிப் பெருநிலப்பரப்பு, கிழக்கு, சிங்களப் பகுதி என பிரதேசரீதியாக

- புவியியற் பரப்புகளூடே தனித்தனிப் பண்புகள் கண்டறியப்படுகின்றன.

-கண்ணகி வழிபாட்டின் பரவல் - தமிழகத்திற்கும் ஈழத்திற்குமான வாய்மொழி மரபு, ஆன்மீகம்,குடியேற்றம், வணிகத் தொடர்பு எனப் பலவேறு தொடர் புத்தளங்களில் விரிவடைந்து செல்கிறது.

- ஈழத்தில் தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாகவும், நடுகல் - வீர வழி பாட்டின் ஒரு கூறாகவும் கண்ணகி வழிபாடு ஏற்கப்படும் அதேவேளை, சிலப்பதிகார த்திற்கு முன்பும் கண்ணகி வழிபாடு இடம் பெற்றிருக்கலாம் என்ற கருத்தும் முன் வைக்கப்படுகிறது.

- கயவாகு கொண்டு வந்ததாகக் கூறப்படும் கண்ணகி வழிபாடு சார்ந்தும், தொடராகவும் - கண்ணகி வழிபாடு பற்றிய பல்வேறு ஐதீகக் கதைகள் ஈழத்தில் காணப்படுகின்றன.

- மதுரையை எரித்த பின்னர் - கண்ணகியின் கோபம் தணிவது தொடர்பிலும், கண்ணகி வழிபாடு என்பது கண்ணகியின் வருகை யாகப் போற்றப்படுவது தொடர்பிலும் - மக்கள் நம்பிக்கைகள் ஈழத்தில் பரவலாக உள்ளன.

- ஒருவகையில் 'சிலப்பதிகாரம்' காட்டும் கண்ணகியின் வாழ்வு - அதற்கப்பால், ஈழத்தில் தொடர்வதான 'கண்ணகியின் கோபமும் தணிவிப்பும்' பகுதிகள் தேடலுக்கும் ஆய்விற்கும் உரியவை.

- கண்ணகி வழிபாடு - நாட்டுப்புற இலக்கியங்கள்,கலைகள்,விளையாட்டு களுடன் கொண்டிருக்கும் நெருக்கம்

- 'ஆகமமயமாக்கம்' போன்ற தடைகளைக் கடந்தும் - கிராமிய வாழ்வுடன் ஒன்றித் திருப்பதையும் இன்னமும் செல்வாக்குச் செலுத்துவதற்குக் களனாக அமைவதையும் எடுத்துக்காட்டுகிறது.

- பிணிகள், வெப்பு நோய்கள் தீர்ப்பில் மட்டுமல்லாது,வளத்திற்கும் செழுமைக் குமான வேண்டுதலுக்குரிய தெய்வமாகவும்- கண்ணகி போற்றப்படுகிறாள்.

- ஈழத்தில் போரின் அவலத்திற்குச் சான்றாகும் பெண்களின் துயரத்தின், அவலத்தின், வேதனையின் குறியீடாகவும் - அந்த நிலைகளிலிருந்து வெளிப்பட்டேயாக வேண்டிய ஓர்மத்தினதும் மீளெழுச்சி யினதும் தூண்டுகோலாகவும், துணிச்சலும், நியாயம் தேடும் வேட்கையும் ஊட்டு வனவாகவும் 'கண்ணகி' படிமம் நோக்கப் படுகிறது.

- ஈழத்தின் சமூகவயமாக்கத்தின் ஒரு நிலைக்களனாக, கண்ணகி வழிபாடும், வழிபாட்டிடங்களும் திகழ்கின்றன. குறிப்பாக

- வன்னியிலும், கிழக்கிலும் இதனை அதிகம் கூறலாம்.

- சிங்களம் முன்னெடுக்கும் 'பௌத்தமயவாக்கம்', கண்ணகியை - பத்தினியாக்கியது ஒருபுறம்

- இனத்துவரீதியிலும், பௌத்த சிங்கள மேலாதிக்கம் - தமிழரின் வழிபாட்டுரிமையைப் பிடுங்கி அழிப்பது

- அன்றிலிருந்து இன்றுவரை நீண்டே செல்கிறது.

குறிப்புகள்


1. வி.சீ. கந்தையா, மட்டக்களப்புத் தமிழகம்' ஈழகேசரி பொன்னையா நினைவு மன்ற வெளியீடு, யாழ்ப்பாணம், 1964.
2. மேலது
3. *www.aanmegam.com*
4. *www.alaikal.com*
5. பொன். குலேந்திரன், 'இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு, *www.kanaga_Sritharan.tripod.com*
6. பேராசிரியர், க.கணபதிப்பிள்ளை, 'ஈழத்து வாழ்வும் வளமும்', குமரன் புத்தகநிலையம், கொழும்பு, இரண்டாம் மீள்பதிப்பு : 2001, பக் -26
7. கலாநிதி க.செ.நடராசா, 'ஈழத்து தமிழிலக்கிய வளர்ச்சி'
8. கார்த்திகேசு சிவத்தம்பி, 'யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு' - ஒர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம்', ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாடு நிறுவனத்தில் ஆற்றிய உரையின் திருத்திய பிரதி, பெப்ரவரி 1995.
9. கார்த்திகேசு சிவத்தம்பி, 'யாழ்ப்பாணத்தின் எழுதவிடப்படாத கலை வரலாறு பற்றி .' - காரை. சுந்தரம்பிள்ளையின் 'ஈழத்து இசை நாடக மரபு' நூலின் முன்னுரை, 1986
10. கா.சிவத்தம்பி, 'யாழ்ப்பாணச்சமூகத்தை விளங்கிக் கொள்ளல்', பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை, ஆனி 1992.
11. *Karthigesu Sivathamby, `Tamil of Srilanka - An ethnological introduction` - 1989.*
12. கார்த்திகேசு சிவத்தம்பி, 'யாழ்ப்பாண இந்து மக்களிடையே சமூக மனிலைப்பாட்டு அசைவியக்கமும் வழிபாடும்', தலங்காவல் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலர் -1988.
13. நிலாந்தன், 'வன்னி மான்மியம்,' நியதி,' ஸ்கந்தபுரம் வன்னி, 2002, பக்கம் - 15.
14. அருணா செல்லத்துரை, 'வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள் - பாரம்பரியத் தேடல்', அருணா வெளியீட்டகம், கொழும்பு, 2000.
15. மேலது
16. கலாநிதி இ.பாலசுந்தரம், 'ஈழத்து நாட்டார் பாடல்கள் - மட்டக்களப்பு மாவட்டம்' தமிழ்ப்பதிப்பகம், அடையாறு, சென்னை, 1979.
17. வி.சீ. கந்தையர் , 'மட்டக்களப்புத் தமிழகம்' பக்கம் - 159.
18. அருணா செல்லத்துரை, 'வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள் - பாரம்பரியத் தேடல்,' அருணா வெளியீட்டகம், கொழும்பு, 2000
19. முல்லைமணி வே. சுப்பிரமணியன், 'முல்லை மாவட்ட நாட்டார் இலக்கியம் - ஒரு நோக்கு,' நாட்டார் ஆய்வு, கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு, திருகோணமலை, 2001,
20. மேலது
21. 'கண்ணகி ' என்னும் பெயர், ' கண்ணகை ' எனத் திரிபும் பெற்றுள்ளது, கண் - நகை என்ற இரு சொற்களின் சேர்க்கையா லான இப்பெயர் கண்ணின் ஒளி, கண்ணுக்கு அணிகலன் என்னும் பொருள்களில் ஈழநாட்டில் கருதப் படுகிறது. கண்ணகை அம்மன் சடங்குக் காலத்தில் பொன்னாலும் வெள்ளியி னாலும் செய்யப்பட்ட கண்ணுரு வங்களும் கண்மணிகளும் அம்மனுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப் படுதலையும் நாம் இக்கருத்தில் கண்டு கொள்ளலாம்.- வி.சீ. கந்தையா, 'மட்டக்களப்புத் தமிழகம்,' யாழ். ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், 1964, பக்கம் - 167.
22. அருணா செல்லத்துரை, 'வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள் பாரம்பரியத் தேடல்' அருணா வெளியீட்டகம்,

கொழும்பு, 2000

23. வி.சீ. கந்தையா, 'மட்டக்களப்புத் தமிழகம்,' யாழ், ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், 1964, பக்கம் - 155.

24. மேலது, பக்கம் - 187

25. மேலது

26. மேலது

27. கலாநிதி இ.பாலசுந்தரம், 'ஈழத்து நாட்டார் பாடல்கள் - ஆய்வும் மதிப்பீடும் - மட்டக்களப்பு மாவட்டம்'. தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை, 1979.

28. பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை, 'ஈழத்து வாழ்வும் வளமும்', குமரன் புத்தக நிலையம், கொழும்பு, இரண்டாம் மீள்பதிப்பு : 2001, பக் - 90

29. வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா - பதிப்பாசிரியர், 'மட்டக்களப்பு மான்மியம்', கலாநிலையம், கொழும்பு, 1962.

30. 'யுத்த கால நெருக்கடியும் - மட்டு - அம்பாறை சிறுமிகளும்' www.udaru.blogdrive.com, June 20, 2005

31. வி.சீ. கந்தையா, 'மட்டக்களப்புத் தமிழகம்', யாழ். ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், 1964, பக்கம் - 167.

32. மேலது பக் 171.

33. மேலது

34. மேலது

35. மேலது

36. பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம், 'ஈழத்து நாட்டார் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்', நாட்டார் ஆய்வு - கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு திருகோணமலை, 2001.

37. கலாநிதி இ.பாலசுந்தரம், 'ஈழத்து நாட்டார் பாடல்கள் - ஆய்வும் மதிப்பீடும் - மட்டக்களப்பு மாவட்டம்', தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை, 1979

38. க. மகேஸ்வரலிங்கம், 'மட்டக்களப்பில் மறைந்துவரும் கொம்பு விளையாட்டு', நாட்டார் ஆய்வு - கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு திருகோணமலை, 2001

39. மேலது

40. பேராசிரியர் சி. மௌனகுரு, 'ஈழத்து தமிழரங்கின் சமகாலச் செல்நெறிகள்,' சென்னை - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடாத்திய 'அயல்நாடுகளில் தமிழ்' கருத்தரங்கக் கட்டுரை - 1997

41. *Prof. S.Ganesan, `The Gajabahu synchronism`,www.varalaaru.com*

42. *BH. Hemapriya, `Ankeli puja and the pattini cult`, www.virtuallibrary-srilanka.com*

43. *Rukmal Gunasekara, `Dances of Sri Lanka`*

44. *AGS. Kariyawasam, `Buddhist ceremo nies and rituals of SriLanka`, Wheel Publication.*

45. வி.சீ. கந்தையா, 'மட்டக்களப்புத் தமிழகம்', யாழ். ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், 1964, பக்கம் - 161

46. *Prof. S.Pathmanathan, `The cult of Pattini or Kannakai Amman in Sri Lanka.*

47. *Prof.KNO. Dharmadasa, Editor in Chief - Sinhala encyclopaedia, Interview with the Hindu Daily, 25-05-2005.*